## முயற்சியை கைவிடாமல் தொடர்ந்து போராடுங்கள்

# தோல்விதான் வெற்றிக்கு முதல் படி

**பட்டமளிப்பு விழாவில் அமைச்சர் பிரியாங்க் கார்கே அறிவுரை**



**பெங்களூரு, செப்.28:** ஒவ்வொரு தோல்விகளும் வெற்றியின் அடிப்படை. தொடர்ந்து முயற்சி செய்வதன் மூலம் பல வெற்றிகளை எட்டி பிடிக்கலாம் என அமைச்சர் பிரியாங்க் கார்கே பட்டதாரிகளுக்கு அறிவுரை கூறினார்.

பெங்களூரு, புனித ஜோசப் பல்கலைக்கழகத்தின் 3வது பட்டமளிப்பு விழா நேற்று நடைபெற்றது. மாநில உள்துறை அமைச்சர் பிரியாங்கார்கே, நாடாளுமன்ற உறுப்பினர் மன்சூர் அலி கான் இதில் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்றனர். கனடாவின் ஃபேர்ஃபாக்ஸ் ஃபைனான்சியல் ஹோல்டிங்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் நிறுவனர், தலைவர் மற்றும் தலைமைச்செயல் அதிகாரியான பிரேம் வாட்சா தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டார்.

வேந்தர் அருட்தந்தை டியோனிசியஸ் வாஸ், எஸ்.ஜே., துணைவேந்தர் அருட்தந்தை டாக்டர் விக்டர் லோபோ, எஸ்.ஜே., மற்றும் இணை வேந்தர் அருட்தந்தை டாக்டர் மெல்வின் பிண்டோ, எஸ்.ஜே. ஆகியோர் முன்னிலையில் அமைச்சர் பிரியாங்க் கார்கே, எம்பி மன்சூர் அலிகான் மாணவ மாணவிகளுக்கு பதக்கம் மற்றும் விருதுகள் வழங்கினர்.

விழாவில் உள்துறை அமைச்சர் பிரியாங் கார்கே பேசியதாவது: "30 வருடத்திற்கு முன்பு இதே பல்கலைக்கழகத்தில் சேர்வதற்காக விண்ணப்பம் செய்தேன். ஆனால், எனக்கு இடம் கிடைக்கவில்லை. தற்போது அதே பல்கலைக்கழக விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு இருக்கிறேன். அது போல் நான் எனது முதல் தேர்தலில் தோற்றேன். தொடர்ந்து முயற்சி மேற்கொண்டதால் இந்தியாவில் முதல் இளம் வயது தகவல் தொழில்நுட்பம், சுற்றுலா, சமூக நலத்துறை அமைச்சராகவும் தற்போது உள்துறை அமைச்சராகவும் உங்கள் முன் நிற்கிறேன். எனவே, பட்டம் பெற்றுள்ள மாணவ மாணவிகள் முதலில் வேலைவாய்ப்பிற்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டும். முதலில் வெற்றி கிடைக்கவில்லை என்றாலும் தொடர்ந்து முயற்சி மேற்கொண்டால் வெற்றி உங்களின் கைவசமாகும். முதன் முறையாக சட்டசபை தேர்தலில் வெற்றி பெற்ற பிறகு ஐடி.,பிடி., அமைச்சர் பதவி ஒதுக்கப்பட்டது. அப்போது மூத்த உறுப்பினர் எஸ்.ஆர். பாட்டீல் உள்ளிட்டோர் இந்த இளைஞர் எப்படி ஐடி.,பிடி., துறையை நிர்வகிக் கமுடியும் என கேள்வி எழுப்பினர். ஆனால், அடுத்த முறை நடந்த சட்டசபை தேர்தலில் வெற்றி பெற்ற பிறகு மீண்டும் அதே ஐடி.பிடி., துறையும் தற்போது உள்துறையும் சேர்த்து வழங்கப்பட்டுள்ளது. எனவே, தோல்விகளை கண்டு துவண்டு விடாமல் தொடர்ந்து முயற்சி செய்வதன் மூலம் தொடர் வெற்றி அடைய முடியும்" என்றார்.

இதைத்தொடர்ந்து பிரேம் வாட்சா , இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி மற்றும் வாய்ப்புகளை அவர் எடுத்துரைத்து, "இந்தியா 7.8% பொருளாதார வளர்ச்சியுடன் ஒரு மகத்தான மாற்றத்தை சந்தித்து வருகிறது. நடுத்தர வர்க்கத்தில் ஏறத்தாழ 300 மில்லியன் மக்கள் உள்ளனர், இது 10 ஆண்டுகளில் 600 மில்லியனாக உயரும். அனைவருக்கும் சிறப்பான எதிர்காலம் இருக்கிறது. சுமார் 5 மில்லியன் டாலர் நிதியுதவி வழங்குவதாகவும்" அறிவித்தார். அருட்திரு முனைவர் விக்டர் லோபோ பேசுகையில், ''ஒவ்வொருவரும் ஒரு பட்டத்தை மட்டுமல்ல, அறிவைச் செதுக்கி, குணத்தைச் சோதித்து, உலகில் நன்மைக்கான சக்தியாக மாறும் பொறுப்பைத் தட்டி எழுப்பிய ஒரு பயணத்தின் முத்திரையையும் கொண்டுள்ளனர்'' என்றார்.

விழாவில், பல்வேறு துறைகளைச் சேர்ந்த 123 மாணவர்கள் உட்பட, சுமார் 2,300 பட்டதாரிகள் கவுரவிக்கப்பட்டனர்.